**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு**

**மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு – 2026 ஆம் ஆண்டு**

**இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**

1. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முன் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இந்த அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.

2. விண்ணப்பங்களை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

03. 2021,2022,2023அல்லது 2024 ஆகிய ஆண்டுகளில் ஏதாவதொரு ஆண்டில் கல்வி பொது தராதர (உ.தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் அல்லது பௌதிக விஞ்ஞான பிரிவில் தோற்றி சித்தியடைந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவார்கள். (மேலதிக விபரங்கள் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை இலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ளது.)

04 விண்ணப்ப முடிவுத் திகதி 2026.06.30 ஆகும்.

05 ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். **(வர்த்தமானி அறிவித்தலின் 1.1 பந்தியை பார்க்கவும்).**

06 ரூபா 1000 /= இனை இணைய வங்கிச் சேவை மூலமாகவோ அல்லது பணம் வைப்பு இயந்திரங்கள் மூலமாகவோ **செலுத்தக்கூடாது**.

07 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன் இலங்கை வங்கிக்குச் சென்று ரூபா 1000/= இனை செலுத்த வேண்டும். நேர்காணலுக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் , சரிபார்ப்பதற்காக வங்கியிலிருந்து பெற்ற ரசீதை பத்திரமாக வைத்துக்கொள்ளவும். அவ்வாறு செய்யத்தவறினால் அதாவது, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் பணம் செலுத்திய அல்லது பணம் செலுத்தாமல் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். **(வர்த்தமானி அறிவித்தலின் 1.4 மற்றும் 6.3 பந்திகளை பார்க்கவும்)**

08. விண்ணப்பத்தை முறையாகச் சமர்ப்பிக்க உங்கள் மின்னஞ்சல் முகவரியை சரியாக உள்ளிடவும். (உங்களிடம் மின்னஞ்சல் முகவரி இல்லையென்றால் நீங்கள் முதலில் ஒரு மின்னஞ்சல் முகவரி உருவாக்க வேண்டும்.) விண்ணப்பத்தை சரியாக பூர்த்தி செய்த பிறகு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அதன் பிரதியை தங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு கட்டாயமாக பதிவிறக்கம் செய்து அதை அச்சிட்டு பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். விண்ணப்பத்தின் பிரதி உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு பதிவிறக்கம் செய்யப்படவில்லை என்றால் (Inbox/spam) நீங்கள் விண்ணப்பத்தை சரியாக சமர்ப்பிக்கவில்லை என்று பொருள். அவ்வாறு தங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பத்தை பெறாத விண்ணப்பதாரர்கள் உடனடியாக மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவை தொடர்பு கொள்ளவும். **(வர்த்தமானி அறிவித்தலின் 6.4 வது பந்தி 6.5 பந்தியையும் பார்க்கவும்)**

09. பின்வரும் தகுதியின்மைகளைக் கொண்ட மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்கக்கூடாது. (வர்த்தமானி அறிவித்தலின் 1.2 துணை பந்தி 5 வது பந்தியின் 5.1 முதல் 5.5 வரையான துணை பந்திகளை பார்க்கவும்)

(அ). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகளின் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

Dr.W.K. Wickremasinghe
Additional Secretary (Medical Services)
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10

(ஆ). தேசிய கல்வியல் பீடம், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு உட்பட பிற அரச நிறுவனங்களில் உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் முழு நேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கல்வி பயிலும் மாணவர்கள்.

10 எந்தவொரு விண்ணப்பதாரியும் தனது இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. (வர்த்தமானி அறிவித்தலின் 1.3 வது பந்தியை பார்க்கவும்)

11 கையடக்க தொலைபேசி இலக்கத்தை உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது மற்றும் தந்தை /தாய் / பாதுகாவலரின் கையடக்க தொலைபேசி இலக்கத்தையும் உள்ளிடலாம்.

12 விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறைகளை ஆரம்பிக்க முன்னர் விண்ணப்பதாரியிடம் இருக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 1.4 வது பந்தியை பார்க்கவும்)

- தேசிய அடையாள அட்டை
- உங்களின் உயரம் (செ.மீட்டரில்) குறிப்பிடப்படல் வேண்டும்
- க.பொ.த (சா.தரம்)/ (உ.தரம்) சான்றிதழ்கள் மற்றும் Z மதிப்பெண்களைக் காட்டும் ஆவணம்
- தொடர்பு கொள்ள வேண்டிய இரண்டு கையடக்க தொலைபேசி இலக்கங்கள்
- ரூபா 1000/= இனை செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு (வர்த்தமானி அறிவித்தலின் 6.3 வது பந்தியை பார்க்கவும்)

13. **இணைய வழி ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்**

(அ). விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஆ). க.பொ.த (உ.தர) பரீட்சையில் பயன்படுத்திய தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.

14. **அத்தியவசிய தகவல்களுக்காக விசாரித்தல்**

இக்கற்கைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே வர்த்தமானி அறிவித்தலின் 6.4 (இ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். **(மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)**

பிற விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

15.வர்த்தமானி அறிவிப்பின் பந்தி 8.1 இன் படி நேர்முகப்பரீட்சை நடத்திய பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பற்றிய தகவல்கள் இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன், யாருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படாது. எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் /அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும்.எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

Dr.W.K. Wickremasinghe
Additional Secretary (Medical Services)
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10